செ.வெ.எண்: 71

நாள்: 24.1.2008

அரசு செய்தி வெளியீடு – 24.1.2008

# இதோ; இறக்குமதி "சிமெண்ட்" மூட்டை ரூ. 160

தமிழக அரசின் நிறுவனமான டான்செம் (TANCEM) வெளிநாட்டிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்துள்ளது. சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்கள் வரை இறக்குமதி செய்யப்பட்ட ஓ.பி.சி., 43, கிரேடு சிமெண்டின் தோராயமான விலை மூட்டை ஒன்றுக்கு ரூ. 160 ஆகும் (C.I.F. Price on High Seas).

கட்டுமானப்பணிகளை ஏற்று நடத்தும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் கட்டிடம் கட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ளோர், பொதுமக்கள், தமது சிமெண்ட் தேவைகளை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகத்திடம் பதிவு செய்து கொள்ளலாம். குறைந்த பட்சம் ஒரு கன்டெய்னர் (24 டன்கள்) (480 மூட்டைகள்) பதிவு செய்து கொள்ள வேண்டும். துறைமுகத்தில் கையாளும் செலவு மற்றும் போக்குவரத்துச் செலவு, தர ஆய்வு சோதனை செலவு ஆகியவை வாங்குவோர்களைச் சார்ந்தது ஆகும். இறக்குமதி சிமெண்ட் வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

பொதுமேலாளர் (விற்பனை),
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கழகம், (டான்செம்),
எல்.எல்.ஏ. பில்டிங், இரண்டாவது தளம்,
735, அண்ணா சாலை, சென்னை 600 002.
**தொலைபேசி எண். 044 28525477.**

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.